RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-73 | 19 மார்ச் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## நெல்லையில் ஓய்வுபெற்ற எஸ்.ஐ. கொலை கலைஞரின் தனிப் பிரிவு அதிகாரியாக இருந்தவர்!

திருநெல்வேலி, மார்ச்.19

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் தனிப்பிரிவு அதிகாரியாக பணியாற்றிய ஓய்வு பெற்ற சப்இன்ஸ்பெக்டர் நெல்லையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை டவுன் தடிவீரன் கோயில் தெருவை சேர்ந்த ஜாகிர் உசேன் பிஜிலி (57) காவல்துறையில் சப் இன்ஸ்பெக்டராக பணியாற்றினார். முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சி காலத்தில் அவரின் தனிப்பிரிவு அதிகாரியாக இருந்தார். ரம்ஜானை ஒட்டி நோன்பு இருந்து வரும் நிலையில் இன்று அதிகாலையில் தர்காவுக்கு தொழுகைக்கு சென்றுள்ளார்.




தொழுகையை முடித்துவிட்டு வீட்டுக்கு வரும் வழியில் தெற்கு மவுண்ட் ரோடு பகுதியில், மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் கொண்ட கும்பல் ஜாகிர் உசேன் பிஜிலியை வழிமறித்து அறிவாளால் வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்று விட்டது. திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் கீதா தலைமையிலான போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினார்கள்.

ஜாகிர் உசேன் பிஜிலியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலைச் சம்பவம் நெல்லையில் பரபரப்பு ஏற்படுத்தியது. இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன் தலைமையிலான போலீஸார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து கொலையாளிகளை தேடி வருகிறார்கள். போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில் நெல்லை டவுன் காட்சி மண்டபம் அருகே உள்ள 36 சென்ட் இடம் தொடர்பான பிரச்சினையில் இந்த கொலை நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## விண்வெளியில் இருந்து பூமிக்கு புறப்பட்ட சுனிதா வில்லியம்ஸ்!

புளோரிடா, மார்ச்.19

இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் பேரி வில்மோர் பூமிக்கு புறப்பட்டுள்ளனர். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் அவர்கள் பூமி கோளுக்கு வருகின்றனர். சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் அன்டாக் ஆகி பிரிந்துள்ளது.




இந்திய நேரப்படி புதன்கிழமை அதிகாலை புளோரிடா கடலில் டிராகன் ஸ்பிளாஷ் டவுன் ஆக உள்ளது. அவர்களுடன் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இருவர் டிராகன் விண்கலம் மூலம் பூமி திரும்புகின்றனர். இதை நாசா தெரிவித்துள்ளது. இந்திய நேரப்படி அதிகாலை 3 மணி அளவில் அவர்கள் பூமியை அடைவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது வருகையை உலக நாடுகள் எதிர்பார்த்துள்ளன.

தாமதம் ஏன்? அமெரிக்காவின் போயிங் நிறுவனம், அந்த நாட்டின் விண்வெளி அமைப்பான நாசா உடன் இணைந்து போயிங் ஸ்டார்லைனர் என்ற விண்கலத்தை உருவாக்கியது. இந்த புதிய விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர்.

இருவரும் 10 நாட்கள் ஆய்வு செய்துவிட்டு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பர் 7ம் தேதி ஸ்டார்லைனர் விண்கலம், ஆட்கள் இன்றி வெறுமையாக பூமிக்கு திரும்பியது.

இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த விண்கலத்தில் 4 வீரர்களுக்கு பதிலாக இருவர் மட்டுமே சென்றனர். தற்போது சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ், வில்மோர் மற்றும் டிராகன் விண்கலத்தில் அனுப்பப்பட்ட அமெரிக்க வீரர் நிக் ஹேக், ரஷ்ய வீரர் அலெக்சாண்டர் ஆகியோர் உட்பட 7 பேர் உள்ளனர்.

சுனிதா வில்லியம்ஸும், வில்மோரும் சுமார் 9 மாதங்களுக்கும் மேலாக விண்வெளியில் தங்கி உள்ளனர். அவர்களுக்கு பதிலாக புதிய வீரர்களை சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்புவதில் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டு வந்தது.

## உதகையில் 127வது மலர்க் கண் காட்சி மே 16 முதல் 21 வரை 6 நாட்கள் நடக்கிறது

உதகை, மார்ச்.19

127வது மலர் காட்சி, உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் 16 முதல் 21 வரை 6 நாட்கள் நடக்கிறது. குன்னூர் காட்டேரி பூங்காவில் முதன் முறையாக மலைப் பயிர்கள் காட்சி மே 31 மற்றும் ஜூன் மாதம் 1ம் தேதி நடக்கிறது.



நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் கோடைவிழா நடக்கும். இந்த விழாவின் முக்கிய நிகழ்வுகளாக காய்கறி காட்சி, வாசனை திரவிய காட்சி, ரோஜா காட்சி, மலர்க்காட்சி, பழக்காட்சி என விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் மலர்க்காட்சியைக் காண உலகம் முழுவதிலும் இருந்து பல லட்சக்கணக்கான சுற்றுலா பபணிகள் வருகை புரிகின்றனர்.

இம் மலர்க்காட்சி மற்றும் இதர காட்சிகள் ஆண்டு தோறும் மலர்க்காட்சி மற்றும் பழக்காட்சி குழுவினரால் காட்சிகள் நடத்துவதற்கான தேதிகள், ஏற்பாடுகள் மற்றும் வரவு, செலவு குறித்தான தீர்மானங்கள் அனைத்தும் மலர் மற்றும் பழக்காட்சி குழுவினரால் நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மலர் மற்றும் பழக்காட்சி குழுவில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் மற்றும் குழுத் தலைவர், நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் குழு உபதலைவர், நீலகிரி மாவட்ட தோட்டக் கலை இணை இயக்குநர் மற்றும் குழு செயலாளர், அரசு தாவரவியல் பூங்கா, தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் குழு இணை செயலாளர், திட்ட இயக்குநர் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், மற்றும் முக்கிய உறுப்பினர்களைக் கொண்டு இம்மலர் மற்றும் பழக்காட்சி குழுக் கூட்டம் நடைபெறும்.

இந்தாண்டு மலர் மற்றும் பழக்காட்சி குழுக் கூட்டம் உதகை கூடுதல் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் மற்றும் குழுத்தலைவர் குமாரவேல் பாண்டியன், (இணையவழி மூலம்), நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் குழு உபதலைவர் லட்சுமி பவ்யா, தலைமையில் நடைபெற்றது.

அதனடிப்படையில் இந்தாண்டு இம்மாவட்டத்துக்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரியும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் 13 வது காய்கறி காட்சி கோத்தகிரியில் மே மாதம் 3 மற்றும் 4ம் தேதிகளிலும், 11 வது வாசனை திரவிய காட்சி கூடலூரில் 9 முதல் 11ம் தேதிகளிலும், 20வது ரோஜா காட்சி, அரசு ரோஜா பூங்காவில் மே மாதம் 10 முதல் 12ம் தேதி வரையிலும் 127வது மலர் காட்சி, உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் 16ம் தேதி முதல் 21ம் தேதி வரையிலும், 65வது பழக்காட்சி, குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மே மாதம் 23ம் தேதி மற்றும் 25ம் தேதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

குன்னூர் காட்டேரி பூங்காவில் முதன்முறையாக மலைப் பயிர்கள் காட்சி மே 31 மற்றும் ஜூன் மாதம் 1ம் தேதி நடக்கிறது. இக்கூட்டத்தில், தோட்டக்கலை துறை இணை இயக்குநர் சிபிலா மேரி, தோட்டக்கலை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## அவுரங்கசீப் சமாதியை அகற்றக் கோரி நாக்பூரில் பற்றி எரிந்த வன்முறை

நாக்பூர், மார்ச்.19

அவுரங்கசீப் சமாதியை அகற்றக் கோரி வன்முறை நடந்த நிலையில் மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் பல்வேறு பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. பாரதிய நியாய சன்ஹிதா சட்டப் பிரிவு 163ன் கீழ் இந்த ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது என்று காவல்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து நாக்பூர் காவல் ஆணையர் ரவீந்திர குமார் சிங்கால், மறு உத்தரவு வரும்வரை இந்த ஊரடங்கு உத்தரவு அமலில் இருக்கும் என்று கூறியுள்ளார். கோட்வாலி, கணேஷ்பேத், லக்கட்கஞ்ச், தேஷில், சாந்திநகர், பச்பாவ்லி, சக்கர்தரா, நந்தவனம், இமாவாடா, யோசோதரா நகர், கபில் நகர் உள்ளிட்ட காவல் சரகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

நடந்தது என்ன? முன்னதாக நேற்று (மார்ச் 18) நாக்பூரின் மஹல் பகுதியில் உள்ள சிவாஜி சிலை அருகே விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தள அமைப்பினர் என 200 முதல் 250 பேர் திரண்டனர். அவர்கள் அவுரங்கசீப் சமாதியை அகற்ற வேண்டும் எனக் கோரி கோஷங்களை எழுப்பினர். அவுரங்கசீப்பின் உருவப்படம் கொண்ட போஸ்டர்களை எரித்தனர். இந்நிலையில் அந்தப் போராட்டத்தின் போது இஸ்லாமியர்களின் புனித நூல் எரிக்கப்பட்டதாக வதந்திகள் பரவியது.

இதன் எதிரொலியாக சுமார் இரவு 7.30 மணியளவில் பல்தர்புராவில் 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திரண்டனர். அவர்கள் சட்டம் ஒழுங்குக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் வன்முறையில் ஈடுபட்டனர். கடைகளை சூறையாடுவது, வாகனங்களை சேதப்படுத்துவது, தீ வைப்பது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

அதிரடி காவல்படையினர் திரண்டு கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இதில் 30க்கும் மேற்பட்ட அதிரடிப் படையினர் காயமடைந்ததாகத் தெரிகிறது. இந்நிலையில், அமைதியை உறுதி செய்யும்வகையில் சட்டப்பிரிவு 163ன் கீழ் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப் பட்டுள்ளது.

இதன்படி 5க்கும் மேற்பட்டோர் ஓரிடத்தில் கூட தடை செய்யப்பட்டுள்ளது. வன்முறை தொடர்பாக வதந்திகளைப் பரப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இந்த உத்தரவு அரசுப் பணியாளர்கள், அத்தியாவசிய சேவைப் பணியில் உள்ளோர், பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் உள்ளிட்டோருக்கு பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறை குறித்து நாக்பூர் பாஜக எம்எல்ஏ பிரவீன் தாட்கே கூறுகையில், “ஒட்டுமொத்த வன்முறையும் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. காலையில் நடந்த அவுரங்கசீப் சமாதியை அகற்றக் கோரும் போராட்டத்துக்குப் பின்னர் எல்லாமே இயல்பாகவே இருந்தது. ஆனால் மாலையில் வன்முறைக் கும்பல்கள் இந்துக்களில் வீடுகள், கடைகள் சூறையாடியது. முதலில் சிசிடிவி கேமராக்களை நொறுக்கிவிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்ட முறை, பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் எல்லாமே திட்டமிட்டு இத்தாக்குதல் நடத்தப் பட்டதையே குறிக்கிறது.” என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்ச்சையின் பின்னணி என்ன? மகாராஷ்டிரா சத்ரபதி சம்பாஜி நகர் மாவட்டம் குல்தாபாத்தில் முகலாய மன்னர் அவுரங்கசீப்பின் சமாதி உள்ளது. 1707 மார்ச் 3ம் தேதி அவுரங்கசீப் இறந்தபின் அவரது விருப்பத்தின் பெயரில் இங்கு உடல் புதைக்கப்பட்டது. அந்த கல்லறையை பொதுமக்கள் பார்வையிட்டு செல்கின்றனர். இந்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட வரலாற்று சின்னமாக இந்த கல்லறை உள்ளது.

இந்நிலையில் இந்த சமாதியை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. பாலிவுட் வரலாற்று திரைப்படம் ‘சாவா’ தான் அவுரங்கசீப் கல்லறையை அகற்ற வேண்டும் என்பதற்கு காரணமாகியுள்ளது. சத்ரபதி சிவாஜியின் மகன் சம்பாஜி மகராஜின் கதையான இந்த திரைப்படம் குறித்து மகாராஷ்டிராவின் பட்ஜெட் கூட்டத்தொடரில் விவாதம் எழுந்தது.

அப்போது சமாஜ்வாதி எம்எல்ஏ அபு ஹாஸ்மி பேசும் போது, “பலரும் நினைப்பது போல் அவுரங்கசீப்பை நான் கொடுங்கோலர் எனக் கருத மாட்டேன். சமீபத்திய ஆட்சியாளர்களாலும், திரைப்படங்களாலும் அவரது பெயருக்கு களங்கம் கற்பிக்கப்படுகிறது.” என்று கூறினார். அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால், அபு ஹாஸ்மி மார்ச் 26 வரை பட்ஜெட் கூட்டத்தொடர் முழுவதிலும் இருந்து நீக்கி வைக்கப் பட்டுள்ளார்.

ஆதரவும், எதிர்ப்பும்.. அவுரங்கசீப் சமாதியை அகற்ற முதல்வர் தேவேந்திர பட்னாவிஸும் ஆதரவு அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரச்சினையில் இந்துத்துவா அமைப்புகளுக்கு உத்தவ் தாக்கரே, ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனாவின் இரு பிரிவுகளும் ராஜ் தாக்கரேவின் எம்என்எஸ் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளன. காங்கிரஸ் கட்சி மட்டும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

விஸ்வ இந்து பரிஷத் (விஎச்பி) மாநிலச் செயலாளர் கிஷோர் சவான், பஜ்ரங் தளத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் நிதின் மகாஜன் ஆகியோர் அவுரங்கசீப் சமாதி அகற்றப்படவில்லை என்றால் அயோத்தியில் பாபர் மசூதியை கரசேவையில் இடித்தது போல் அவுரங்கசீப் சமாதியை அகற்றுவோம் என்று தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது. இந்தச் சூழலில் தான் நாக்பூரில் கலவரம் மூண்டு தற்போது ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் அளித்த ஊடகப் பேட்டியில், “நாக்பூரில் வன்முறையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைவரும் அமைதி காகக் வேண்டும். அவுரங்கசீப்பை பெருமைப்படுத்தும் நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம்.” என்று கூறியுள்ளார்.

## ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க கோரி சத்துணவு ஊழியர் ஏப்.24ம் தேதி போராட்டம்

சென்னை, மார்ச்.19

ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கக்கோரி சென்னையில் வரும் 24ம் தேதி முற்றுகை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ந.நாராயணன் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசுத் துறையில் உள்ள சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியரின் முதுமை கால வாழ்வாதாரம் கருதி, சமூக பாதுகாப்புத் திட்ட சிறப்பு ஓய்வூதியத்தை மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அறிமுகம் செய்து வைத்தார். ஆனால், இன்றைய சூழலில் அந்த சிறப்பு ஓய்வூதியமான ரூ.2 ஆயிரம் கால் வயிற்று பசிக்குக்கூட உதவவில்லை. ஓய்வூதியத்தை உயர்த்தக்கோரி நீண்ட காலமாக தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம் போராடி வருகிறது.


கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் சத்துணவு ஊழியர்களுக்கான ஓய்வூதியம் முறைப்படுத்தப்படும் என திமுக அரசு வாக்குறுதி அளித்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும், தனது அரசின் கடைசி பட்ஜெட் அறிவிப்பிலும்கூட எங்களது கோரிக்கை குறித்து எந்த அறிவிப்பும் இடம்பெறாதது வேதனைக்குரியது. இதே அரசுதான் வருவாய் கிராம உதவியாளருக்கு ரூ.5,500, கோயில் பூசாரிக்கு ரூ.4 ஆயிரம், காவல்துறை மோப்ப நாய்க்கு ரூ.10 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்கியிருக்கிறது.

ஆனால், சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியருக்கு ‘கலைஞர் உரிமைத் தொகை’ கூட தரக்கூடாது என உத்தரவிட்டிருக்கிறது. தனது தேர்தல் வாக்குறுதியைகூட நிறைவேற்றாத தமிழக அரசின் வஞ்சக அணுகுமுறையை வன்மையாக கண்டிக்கிறோம். எனவே, சத்துணவு ஊழியர்களுக்கு சிறப்பு ஓய்வூதியமாக ரூ.6,750 உயர்த்தி வழங்கக் கோரி வரும் ஏப்.24ம் தேதி சென்னை காமராஜர் சாலையில் உள்ள சமூக நல ஆணையரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அண்ணாநகரில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மேலும் ரூ.3 லட்சம் நிவாரணமாக வழங்க அரசுக்கு உத்தரவு

சென்னை, மார்ச்.19

சென்னை அண்ணாநகரை சேர்ந்த 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். இதுதொடர்பாக புகார் அளிக்கச் சென்ற பெற்றோரை, அண்ணாநகர் அனைத்து மகளிர் போலீஸார் தாக்கியது தொடர்பாக, தாமாக முன்வந்து விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், இந்த வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டது.



இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், சிபிஐ விசாரணைக்கு தடை விதித்து, இந்த சம்பவம் தொடர்பாக சென்னை பெருநகர காவல் இணை ஆணையராக பதவி வகித்த சரோஜ்குமார் தாக்கூர் தலைமையில் ஆவடி சட்டம் ஒழுங்கு துணை ஆணையர் ஐமான் ஜமால், சேலம் மாநகர வடக்கு துணை ஆணையர் பிருந்தா ஆகியோர் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து உத்தரவிட்டது.

மற்றொரு விசாரணைக்குழு: இந்த குழு, தனது விசாரணை அறிக்கையை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. சிறுமியின் வாக்குமூலத்தை பொதுவெளியில் கசியவிட்டது தொடர்பாக மற்றொரு சிறப்பு விசாரணைக்குழு விசாரித்து வருகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவது குறித்து உயர் நீதிமன்றம் முடிவெக்க உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தது. அதன்படி பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் இழப்பீடு கோரி தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ராஜ்திலக், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஏற்கெனவே ஒரு லட்ச ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேலும் ரூ. 3 லட்சம் மேலும் இடைக்கால நிவாரணமாக வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனக்கூறி அதை தாக்கல் செய்தார். அதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், சிறுமிக்கு இடைக்கால நிவாரணமாக இந்த ரூ.3 லட்சத்தை 4 வார காலத்துக்குள் தமிழக அரசு வழங்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

மாலை தந்தி






திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக கூட்டரங்கில் 202526 நிதி நிலை திட்ட அறிக்கைக்கான ஆலோசனைக் கூட்டம் மாநகர மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.உடன் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம்,துணை ஆணையாளர் சுந்தர்ராஜ்,நிதி குழு தலைவர் கு.கோமதி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## சிவகங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம்

சிவகங்கை மார்ச் 19

மாற்றுத்திறனாளிகளுக்கான இலவசபேருந்துபயணச்சலுகை அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம், வருகின்ற 01.04.2025 மற்றும் 02.04.2025 ஆகிய தேதிகளில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.




சிவகங்கை மாவட்டத்தில் தினந்தோறும் பள்ளி, கல்லூரி, மருத்துவம் மற்றும் தொழில் சார்ந்த பணிகளுக்காக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு செல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவ்வழிதடங்களுக்கான இலவச பேருந்து பயணச்சலுகை அட்டை வழங்கப்பட்டுவருகிறது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக பயணங்கள் மேற்கொள்ளும் மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்து பயணச்சலுகை அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் வருகின்ற 01.04.2025 அன்று பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கும், 02.04.2025 அன்று மற்ற வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் பேருந்துபயணச்சலுகை அட்டை புதிதாகவும் மற்றும் பழைய அட்டையினை புதுப்பித்தும் வழங்கப்படவுள்ளது.

மேலும், இச்சிறப்பு முகாமில் கலந்து கொள்ளும் மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை அசல் மற்றும் நகல்1, ஹிஞ்மிஞி நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம்4, குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் வாக்காளர் அட்டை நகல், பணிபுரியும் நிறுவன சான்று/ கல்விநிறுவனம் சான்று / சுயதொழில் சான்று, கடந்த நிதியாண்டு பெற்ற பேருந்து பயணச்சலுகை அட்டை அசல் ஆகிய சான்றுகளுடன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்து பயணச்சலுகை அட்டையினை புதிதாகவும், பழைய அட்டையினை புதுப்பித்தும் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## மலைப்பாதையில் வட மாநில தொழிலாளி படுகொலை சக தொழிலாளியை பிடிக்க நான்கு தனி படை அமைத்து தேடும் பணி





குன்னூர், மார்ச்19

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலை மரப்பாலம் பகுதியில் தனியார் தேயிலைத் தோட்டத்தில் பணி புரிய ஒடிசா மாநிலத்தில் இருந்து வந்து நரேந்திரன் (42) வீரேந்திரன் ஆகியோர் இருவர் கடந்த ஒரு வாரமாக பணியாற்றி வந்த நிலையில் அவர்களுக்கு தங்குவதற்காக மரப்பாலம் பகுதியில் தோட்ட நிர்வாகம் சார்பாக தங்குவதற்கு வீடு ஒதுக்கப் பட்டிருந்தது இந்நிலையில் நேற்று நரேந்திரன் பணிக்கு வராததால் மேலாளர் வீட்டுக்கு வந்துபார்த்தபோது நரேந்திரன் கழுத்து அறுக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்த மேலாளர் உடனடியாக காவல்துறைக்கு தகவல் கொடுத்தார். இதனை தொடர்ந்து குன்னூர் டிஎஸ்பி ரவி தலைமையில் இன்ஸ்பெக்டர் சதீஷ் மற்றும் போலீசார் விரைந்து வந்து நரேந்திரனின் உடலையும்,ரத்த கரை படிந்துள்ள அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். மேலும் இது தொடர்பாக மாவட்ட எஸ் பி என் எஸ் நிஷா சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி சென்றார்.

இந்த கொலை தொடர்பாக மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. இந்த மோப்பநாய் மரப்பாலத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் மலைப்பாதையில் வேகமாக சென்று நின்றுவிட்டது. முன்னதாக எதிரே வரும் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுமோப்ப நாய்க்கு வாகன ஓட்டிகள் வழி விட்டனர். இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து நரேந்திரனின் உடலை பிரேத பரிசோதனைக்காக குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தக் கொலை சம்பவத்தால் குன்னூர் மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் வீரேந்திரனை பிடிக்க குன்னூர் டிஎஸ்பி ரவி மேற்பார்வையில் நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு கோவை, திருப்பூர், ஈரோடு,சென்னை உள்ளிட்ட பகுதிகளில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இவனது செல்போன் செயல்பாடுகள் குறித்தும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் ஒடிசா மாநிலத்தில் உள்ள வீரேந்திரனின் உறவினர்களிடமும் போலீசார் தொலை பேசி மூலம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.மேலும் மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களுக்கு அடிமையாக இருந்ததால்தான் இந்த சம்பவம் நடந்திருக்க கூடும் எனவும் போலீசார் சந்தேகித்து வருகின்றனர்.

## திருப்பூர் மாநகர் மாவட்ட அம்மா பேரவையின் சார்பாக அதிமுக சாதனை விளக்க திண்ணை பிரச்சாரம்

திருப்பூர், மார்ச்.19

திருப்பூர் மாநகர் மாவட்ட அம்மா பேரவையின் சார்பாக, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அட்லஸ் லோகநாதன் ஏற்பாட்டில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி வாலிபாளையம் பகுதி கழகம் வார்டு என் 34 பாளையக்காடு பஸ் ஸ்டாப் பகுதியில் 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனை திட்டங்களையும், திமுக அரசு பதவிஏற்ற இந்த 4 ஆண்டுகளில் பொதுமக்கள், விவசாயிகள் வியாபாரிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு திருப்பூர் தெற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில அம்மா பேரவை இணை செயலாளருமான சு.குணசேகரன் வீதி வீதியாக சென்று பொதுமக்களுக்கு வழங்கிதிண்ணைபிரச்சாரத்தில் ஈடுபட்டார்.


வாலிபாளையம் பகுதி கழக செயலாளர் சு. கேசவன் முன்னிலை வகித்தனர். மாமன்ற எதிர்க்கட்சி தலைவரும் தென் னம்பாளையம் பகுதி கழகச் செயலாளருமான அன்பகம் திருப்பதி, வரவேற் புரையாற்றினார்.

இந்நிகழ்வில்,கொங்குநகர் பகுதி கழக செயலாளர் முத்து,கோல்டன் நகர் பகுதி கழக செயலாளர் ஹரிஹரசுதன்,கருவம்பாளையம் பகுதி கழக செயலாளர் சிவளா தினேஷ்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் சிட்டி பழனிச்சாமி,மாவட்ட மகளிர் அணி செயலாளர் சுந்தராம்பாள், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பழனிச்சாமி,மாவட்ட கலை பிரிவு செயலாளர் ரத்தின குமார்,மாவட்டம் அம்மா பேரவை இணை செயலாளர்கள் பழனிவேல், நீதிராஜன், ஆண்டவர் பழனிச்சாமி,மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் தாமோதரன்,வார்டு கழக நிர்வாகிகள் கண்ணுச்சாமி, ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## கடையநல்லூர் அருகே ஊர் மேல் அழகியான் அருகே சட்டவிரோதமான பட்டாசு வெடி பொருட்கள் தயாரித்த குடோனுக்கு சீல்

தென்காசி மார்ச் 19.





கடையநல்லூர் அருகே ஊர் மேல் அழகியான் அருகே காட்டுப்பகுதிக்குள் கோழிப்பண்ணை என்ற பெயரில் சட்டவிரோதமான பட்டாசு வெடி பொருட்கள் தயாரித்த குடோனை கண்டுபிடித்து சீல் வைத்தனர்.தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள ஊர்மேல் அழகியான் கிராமத்துக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் பூபதிராஜன் என்பவரின் கோழிப்பண்ணை உள்ளது இந்தப் பண்ணையில் சட்டவிரோதமாக சிவகாசி யிலிருந்து ஏராளமான வெடி மருந்துகளை வாங்கி வந்து அரசுக்கு தெரியாமல் வெடி பொருள் தொழிற்சாலைக்கான உரிமம் இல்லாமல் பட்டாசு தொழிற்சாலை நடத்தப்பட்டு வந்துள்ளது அந்த தொழிற்சாலையில் சரவெடி, அணுகுண்டு , ராக்கெட் வெடி, போன்றவற்றை அப்பகுதியில் உள்ள கூலித் தொழிலாளிகளை வைத்து தயாரித்து விற்பனை செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது

சம்பவ இடத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் ஆகியோரின் உத்தரவின்படி கோட்டாட்சியர் லாவன்யா கடையநல்லூர் தாசில்தார் பாலசுப்பிரமணியன், தென்காசி டிஎஸ்பி தமிழ் இனியன், இன்ஸ்பெக்டர் கவிதா, கடையநல்லூர் தீயணைப்பு நிலைய அலுவலர் ஷேக் அப்துல்லா ஆகியோர் சம்பந்தப்பட்ட சட்ட விரோதமாக வெடி தயாரித்த கோழிப்பண்ணையை பார்வையிட்டு சீல் வைத்தனர். அதிக அளவு வெயில் அடிப்பதால் அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் இருக்க கோழி பண்ணை சுற்றிலும் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு பொதுமக்கள் செல்லாதவாறு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது சிவகாசியில் இருந்து வெடி மருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் வெடி மருந்துகளை அப்புறப்படுத்தும் முயற்சியில் காவல்துறை தீயணைப்புத்துறை வருவாய்த் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பாக பன்னாட்டு கருத்தரங்கம்



காரைக்குடி மார்ச் 19

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் இயற்பியல் துறை சார்பாக இரண்டு நாட்களுக்கான பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பாக பொருட்கள் மற்றும் சமூகத்திற்கான பயன்பாட்டு அறிவியல் என்ற தலைப்பில் இரண்டு நாட்களுக்கான பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில் முதல் நாள் அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை வகித்து இப் பன்னாட்டு கருத்தரங்கின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி தலைமை உரை ஆற்றினார் . அழகப்பா அரசு கலைக்கல்லூரி இயற்பியல் துறை இணைப் பேராசிரியரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் கருணாகரன் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் இயற்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா கருத்தரங்க நோக்க உரை ஆற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் சுப்பையா கலந்து கொண்டு ஆய்வு என்பது சமூகத்திற்கு பயன் அளிப்பதாக இருக்க வேண்டும் என்றும் இன்றைய சூழலில் மாணவர்கள் பெறுகின்ற கல்வி அவர்களை சிந்திக்க வைப்பதாக இருக்க வேண்டும் மாறாக மனப்பாடம் செய்ய வைப்பதாக மட்டும் இருக்கக் கூடாது என்றும் கூறி இன்றைய சமூகத்தில் அறிவியலின் பயன்பாடு மிகவும் முக்கியமானதாக இருப்பதால் அதற்கு இது போன்ற பன்னாட்டு கருத்தரங்கங்கள் மிகவும் அவசியமானவையாக இருக்கின்றன என்று தன் சிறப்புரையில் குறிப்பிட்டார்.

அழகப்பா பல்கலைக் கழகத்தின் இயற்பியல் துறை தலைவர் முனைவர் சங்கர நாராயணன் கலந்து கொண்டு வரும் காலத்தில் சிலிக்கான், குவார்ட்ஸ், லித்தியம் போன்றவை இல்லாமல் வருங்கால தொழில்நுட்பம் இல்லை என்று குறிப்பிட்டு வாழ்த்துரை வழங்கினார். திருச்சிராப்பள்ளி ராமன் ஆய்வு மையத்தின் சார்பாக, கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சந்திரமோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இயற்பியல் துறை இணை பேராசிரியர் சுப்பு நன்றி கூறினார். பன்னாட்டு கருத்தரங்கில் இரண்டாம் நாள் அமர்விற்கு முனைவர் தெய்வமணி வரவேற்புரை ஆற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் ஜோதிபாசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இப் பன்னாட்டுக் கருத்தரங்கின் பொருள் குறித்து சிறப்புரையாற்றினார். பெரம்பலூர் தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரவிச்சந்திரன் கருத்தரங்கின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

வேப்பந்தட்டை அரசு கலை அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை தலைவர் முனைவர் பாஸ்கரன் மற்றும் பயோமி இயக்குநர் முனைவர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இக்கருத்தரங்கில் மலேசியா பல்கலைக்கழக பேராசிரியர் ரமேஷ்காசி, கொரியப் பல்கலைக்கழக பேராசிரியர் ராமர் ராஜமாணிக்கம், பெங்களூர் இந்திய அறிவியல் கழக விஞ்ஞானி முனைவர் ரமேஷ், டெல்லி மத்திய இயற்பியல் ஆய்வக விஞ்ஞானி முனைவர் விஜயன், கற்பகம் நிகர் நிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் மணிகண்டன், புருனோ சந்திரசேகர் மற்றும் காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி தமிழரசன், அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் புல முதன்மையர் முனைவர் ஜெயகாந்தன், ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு கட்டுரைகளை வாசித்தனர். இக்கருத்தரங்கில் பேராசிரியர்கள் மாணவர்களின் சார்பாக மொத்தம் 156 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. மேலும் அழகப்பா அரசு கலைக் கல்லூரியுடன் தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரியும், காரைக்குடி பயோமியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன. இக்கருத்தரங்கில் ஏராளமான பேராசிரியர்களும்,மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர். கருத்தரங்க ஏற்பாடுகளை இயற்பியல் துறையின் இணைப் பேராசிரியர்கள் முனைவர் கருணாகரன் மற்றும் முனைவர் சுப்பு ஆகியோர் செய்திருந்தனர்.



விழுப்புரம் மாவட்டத்தில் தமிழக வெற்றி கழகம் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கடந்த 15 ஆம் தேதி இரண்டாவது வார்டில் மாவட்ட செயலாளர் குஷி மோகன், மற்றும் ஷிவிநி முபாரக் , கொடியேற்றும் விழா நடைபெற்றது. இதைத்தொடர்ந்து தமிழக வெற்றி வெற்றிக் கழக அலுவலகம் திறக்கப்பட்டது. கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் வேலைவாய்ப்பு முகாம்

திண்டுக்கல், மார்ச்.19



மார்ச் 2025 ஆம் மாதத்திற்குரிய தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 21.03.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30மணிக்கு நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் பல முன்னணித் தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களுக்குத் தேவையான நபர்களைத் தேர்வு செய்யவுள்ளனர் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களைத் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யும் பொருட்டு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதத்தின் மூன்றாம் வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகிறது.

அதன்படி மார்ச்2025 ஆம் மாதத்திற்குரிய தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 21.03.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30மணிக்கு நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் பல முன்னணித் தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களுக்குத் தேவையான நபர்களைத் தேர்வுசெய்யவுள்ளனர். இதில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் தங்களின் சுயவிபரக் குறிப்புகளுடன் கூடிய விண்ணப்பம், அனைத்து கல்விச்சான்றுகள் மற்றும் ஒளிநகல் (ஜெராக்ஸ்) களுடன் நேரில் கலந்து கொண்டு பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் இம்முகாமில் மத்திய மற்றும் மாநில அரசின் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு இலவச திறன் எய்தும் பயிற்சிக்கும் பதிவு செய்து கொள்ளலாம்.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ள விரும்பும் தனியார்துறை வேலையளிப்பவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களின் விபரத்தினையும், தொழிற் பழகுநர் பயிற்சிக்குத் தேவைப்படும் பணியாளர்களின் விபரத்தினையும் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமின் மூலம் பணியமர்த்தம் செய்யப்படுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு எக்காரணத்தைக் கொண்டும் ரத்து செய்யப் படமாட்டாது.

மேலும், இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் https://tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து முகாமில் கலந்துகொள்ளலாம். முகாம் தொடர்பான விபரங்களை அறிய DINDIGULEMPLOYMENT OFFICE எனும் டெலிகிராம் சேனலில் இணைந்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு 9499055924 என்ற கைபேசி எண்ணில் சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர். செ.சரவணன், தெரிவித்துள்ளார்.



சேலம், ஏ.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேலம் மகிழம் தமிழ்ச் சங்கம், டுடே பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் மற்றும் சேலம், ஏ வி எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய முப்பெரும் விழா 2025 இல் "தமிழும் வாழ்வியலும்" என்ற பொருண்மையில் எமது கல்லூரி மாணவர்கள் ரா.இளம்பரிதி, இ.அன்பரசு, ம.வெற்றிமதி, க.கார்த்திகா, மா.சஹானாசினி, மு.நிவேதா, ச.சாதனா, வி.தர்ஷினி, சே.ஷர்மதா, கு.செ.மாதேஷ் மிகச்சிறந்த முறையில் எழுதிய கட்டுரைகள் பன்னாட்டு தமிழ் ஆய்விதழாக விமர்சியாக வெளியிடப்பட்டது. கட்டுரைகள் வெளியிட்ட மாணவ மாணவிகளுக்கு கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் வாழ்த்துகள் தெரிவித்தார்.

## பென்னாகரம் பேருந்து நிலையத்தில் கடைகள் ஏலத்தில் முறைகேடு நடப்பதாக மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்

தருமபுரி மார்ச்19




தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட பென்னாகரம் பேருந்து நிலையம் புதிதாக கட்டப்பட்டு கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு திறக்கப்பட்டது இந்த நிலையில் தற்போது வரை பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் பேரூராட்சி நிர்வாகம் ஏலம் விடப்படவில்லை இந்த நிலையில் வருகின்ற 20 ஆம் தேதி பென்னாகரம் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் ஏலம் விடப்படும் என்று பேரூராட்சி நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது இதில் வெளிப்படை தன்மையின்றி அறிவிக்கப்பட்டுள்ள ஏல நடைமுறையில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன வசதி படைத்தவர்கள் மட்டுமே ஏலம் எடுக்க வாய்ப்பு உள்ளது சாதாரண ஏழை எளிய சிறு வியாபாரிகள் கடைகளை ஏலம் எடுக்க முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது என்று கூறி பென்னாகரம் பேருந்து நிலையத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது இந்த ஆர்ப்பாட்டத்தில் கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை 6 லட்சத்திலிருந்து ஒரு லட்சமாக குறைக்க வேண்டும் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனி வைப்புத் தொகை என்பதை மாற்றி ஒரே வைப்புத் தொகையில் எந்த ஒரு கடையையும் ஏலம் எடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். மொத்தம் உள்ள 61 கடைகளில் சில கடைகள் ஏலப்பட்டியலில் இடம் பெறவில்லை இவற்றையும் பகிரங்க ஏலத்தில் கொண்டு வர வேண்டும் ஏற்கனவே கடை நடத்தி வந்தவர்களுக்கு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஒன்று விட்டு ஒன்று என்ற அடிப்படையில் ஒதுக்க வேண்டும் மாற்று திறனாளிகளுக்கு பேருந்து நிலையத்திற்குள் முன்னுரிமை அடிப்படையில் கடை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி மதன் தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் அ. குமார் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எம் மாரிமுத்து வி விஸ்வநாதன் ஜி சக்திவேல் பென்னாகரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆ.ஜீவானந்தம், ஏரியூர் ஒன்றிய செயலாளர் எம் தங்கராஜ், பென்னாகரம் நகர செயலாளர் பி ஆர் செல்வம் மாவட்ட குழு உறுப்பினர்கள் வி.ரவி சி.ராஜி, எம்.குமார், கே.அன்பு, எம்.வளர்மதி, ஆகியோர் கண்டன உரையாற்றினர். பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பணிச்சுமை காரணமாக மன அழுத்தத்திற்கு ஆளாகும் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலர்




சிவகங்கை மார்ச்.19

சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் ஒருவர் போக்குவரத்து அலுவலர் ஒருவர் பணியாற்றிக் கொண்டிருந்த சூழ்நிலையில் தற்பொழுது பணி உயர்வு பெற்று வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் சென்ற நிலையில் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் பணி காலியாக இருப்பதால் சிவகங்கையில் நால் ஒன்றுக்கு 60க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் விபத்து வாகனம் மற்றும் போக்குவரத்து லைசென்ஸ் எடுப்பது போன்ற எண்ணற்ற மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர் இது மட்டுமல்லாது நான்கு சக்கர மற்றும் கனரக வாகனங்கள் ஸிசி ரெனிவல் போன்ற வேலைகளுக்காக மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர் அதே நேரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலராக உள்ளவர் ஆய்வாளர் வேலையையும் சேர்த்து பார்ப்பதால் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகிய நிலை உறுவாகி வருகிறது அதிக பணி சுமை இருக்கும் காரணத்தால் சிவகங்கை மாவட்டத்திற்கு காலியாக உள்ள வட்டார போக்குவரத்து ஆய்வாளர் மணிக்கு புதிய ஆய்வாளரை நியமனம் செய்ய வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது வேலைகள் தாமதம் ஏற்பட்ட மல் துரித நேரத்திலும் பணிகள் நடக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் மற்றும் மாவட்ட நிர்வாகம் வட்டார போக்குவரத்து மேல்மட்ட அலுவலகத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்பதும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது

## தேனியில் கைலாசநாதர் கோவில் அன்பர் பணி குழு செயலாளர் சிவகுமாருக்கு சேவை சுடர் விருது வழங்கி கௌரவிப்பு

தேனி, மார்ச்.19



தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை, தேனி விவேகானந்தா நேதாஜி டிரஸ்ட், கணேசபுரம் உலக அமைதிக் குழு, தேனி கலை இலக்கிய மையம் ஆகியவை

இணைந்து நடத்தும் சேவை சுடர் விருது வழங்கும் விழா தேனி நாடார் சரஸ்வதி பொறி யியல் மற்றும்

தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார்.

உபதலைவர் கணேஷ் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் தேனி மாவட்டம் பெரியகுளம் அருகில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் மலைக்கோயிலில் 2001ல் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவை துவக்கி, பக்தர்கள் வழிபடுவதற்கு ஏதுவாக பௌர்ணமி கிரிவலம் மற்றும் கோயிலில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு சிறப்பான சேவை செய்வதற்கும், மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் உள்ள அன்பர்களை குழுவில் இணைத்து 25 ஆண்டுகளாக குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் ஆலோசனையை ஏற்று சிறப்பாக செயலாற்றி வரும் அன்பர் பணி குழுவின் செயலாளர் தெ.கள்ளிப்பட்டி சிவக்குமாருக்கு சேவை சுடர் விருது மற்றும் பாராட்டு கேடயத்தினை ஓய்வு பெற்ற காவல்துறை ஐ.ஜி பாரி வழங்கி கௌரவித்து பாராட்டினார்.

## தாம்பரம் நகர முன்னாள் துணை செயலாளர் இரா.செல்வகுமார் எக்ஸ் எம்.சி., அவர்களின் தாயார் இரக்கல் செய்தி

தாம்பரம் மார்ச் 19

மறக்க முடியுமா நீங்காத நினைவலைகள் நான் அறிந்த வீர பெண்மணிகள் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு விருதுநகர் மாவட்டம் அருப்புகோட்டையில் பிறந்து வளர்ந்து விருதுநகர் மாவட்டத்தில் உள்ள முத்துகுமாரவரத்தில் திருமணம் ஆகி குழந்தை பிறந்து சில வருடங்களிலேயே கணவர் இறந்து உற்றார் உறவினர்களால் கைவிடப்பட்டு ஒரே ஒரு ஆண் குழந்தையை தூக்கி கொண்டு அவர்களிடம் நானும் எனது மகனும் ஒரு சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து காட்டுகிறேன் என்று உறவினர்களிடம் சவால் விட்டு விட்டு விருதுநகர் ரயில் நிலையத்திற்கு வந்து எங்கே செல்வது என்று தெரியாமல் திக்கற்ற நிலையில் நீன்ற போது சென்னையை நோக்கி வந்த ரயில் ஏறி விடியற் காலையில் தாம்பரம் ரயில் நிலையத்தில்

நின்ற ரயிலில் இருந்து இறங்கி எங்கே செல்வது என்று தெரியாமலும் குழந்தை பசி தாங்காமல் அழுகிறது கையில் காசு இல்லை அப்படியே சாலையை கடந்து ஜிஎஸ்டி சாலையில் உள்ள எம் ஆர் தியோட்டர் சாலையில் இங்கும் ஆங்குமாக அலைந்து கடையாக ஆங்கே இருந்த புளியா மரத்தின் கீழே சோர்வாக அமர்ந்து அழுது கொண்டு இருந்ததை பார்த்த மார்கெட்டில் வியாபரம் செய்யும்

ஒரு பெண் என்னவென்று விசாரித்து தகவலை அறிந்து கொண்டு இனி நீ இங்கேயே இரு உனக்கு சமைக்க தெரியுமா என்று கேட்டு தெரியும் என்று அவர் சொன்ன உடனே முன்று செங்கல் ஒரு சட்டியை வாங்கி வந்து அந்த மரத்தாடியிலேயே சமையால் செய்ய வைத்து இது மார்கெட் பகுதி இங்கே கூலி ஆட்களும் வியாபாரிகளும் குருவிகார்ர்களும் அதிகமாக உள்ளார்கள் அதனால் நீ சாப்பாடு வியாபரத்தை ஆரம்பி என்று ஆரம்பித்து வைத்தார்.

அந்த புளியா மரத்தின் கீழ் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற லட்சியத்துடன் துவக்கிய அவரின் வாழ்க்கை படி படியாக உயர்ந்து கடினமான உழைப்பால் மார்கெட்டில் ஜிஎஸ்டி சாலையிலேயே ஒரு கடையை விலைக்கு வாங்கி ஒட்டல் ஆரம்பித்து அதில் வந்த வருமானத்தில் தாம்பரம் ரங்கநாதபுரத்தில் 2வது தெருவில் ஒரு வீடும் வாங்கி அதிலே தான் மகனை வளர்த்து அவருக்கும் வண்ணாரபேட்டையில் பெண் பார்த்து திருமண செய்து வைத்தார்

தனது மகன் மருமகள் எந்த காலத்திலும் தான் பார்க்கும் வியாபாரத்திற்கு வர கூடாது என்று வைரக்கியமாக வராமல் பார்த்துக் கொண்டார்

அவருக்கும் 5,பேரன் 2,பேத்தி என்று 7பேர் பிள்ளைகள் பிறந்தார்கள் குடும்பம் பெரியதாக ஆகியது ஊரில் இவரை ஒதுக்கி வைத்தார்கள் எல்லாம் வந்து அவர் நிழலில் இலைபாரினர்கள் தாம்பரத்தில் கால் ஊன்றினர்கள் அந்த வீர தாய் யாரும் அல்ல எங்களின் அப்பாவின் அம்மா வீரசின்னம்மா

அந்த குழந்தை எங்களின் தந்தை கே எஸ் ராமையா செட்டியார் அவரது




மனைவி

எங்கள் அம்மா ஆர்.தனம்மாள் எங்கள் பாட்டி வயது முப்பின் காரணமாக இயற்கை எய்தினார் அந்த காலகட்டத்தில் அதுவரையில் நாங்கள் சிறுவர்களாக இருந்த எங்களை கவனித்து வந்த எங்கள் அம்மா களத்தில் இறங்கினர் அவருக்கு துணையாக எங்கள் அப்பாவும் இருவரும் எங்கள் பாட்டி எனக்கு பின் என் மருமகள் இந்த வியாபரத்திற்கு வர கூடாது என்று வைராகிமாக இருந்தார் எம்.ஆர் தியோட்டருக்கு அவரின் கடை வழியாக எங்கள் அம்மா படம் பார்க்க செல்லும் போது கையில் பணத்தை கொடுத்து இனி நீ இங்கே எல்லாம் வர கூடாது என்று சொல்லி அனுப்பி வைப்பார் யார் கடைக்கு வர கூடாது என்று நினைத்தரோ அவருக்கு பின் எங்கள் ஏழு பேரயும் வளர்க்க குடும்பத்தை உயர்த்திட மாமியார் விட்ட பணியை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு இரவு பகல் பாராது கடினமாக உழைக்க தொடங்கினார்.

எங்களையும் உயர்த்தினர் மாமியார் கடைசியாக என் சொந்ததில் யாருக்கும் சம்பந்தம் பண்ண கூடாது என்ற வார்த்தைக்கு கட்டுபட்டு தனது 7 பிள்ளைகள் அனைவருக்கு வண்ணரபேட்டையிலயே அவரின் சொந்ததிலேயே திருமண செய்து வைத்தார் இதில் இடையில் அரசியல் வேறு அப்போது தாம்பரம் திமுகவில் இருந்த முனுஆதி, எல்லார் ராஜமணிக்கம் ஆகியோருக்காக தேர்தல் பணியிலும் அப்பா அம்மாவும் என்னை தூக்கி கொண்டு போய் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

எங்கள் அப்பா எது சொன்னலும் அம்மா கேட்பர்கள் ஆனால் அம்மா ஒரு முடிவு எடுத்து விட்டால் அதை யாராலும் மாற்ற முடியாது அப்படி தான் அப்பா எல்லார் ராஜமணிக்கத்திடம் போய் நான் கவுன்சிலருக்கு ரங்கநாதபுரத்தில் நிற்க போகிறேன் எனக்கு சீட்டு கொடுங்கல் என்று கேட்க அவர் யோவ் நீ அந்த ஊரில் ஒரு குடும்பம் உனக்கு எல்லாம் யாரும் ஒட்டு போட மாட்டாங்க போயா என்று சொல்லி விட்டார் அவர் அதே வேகத்தில் வந்து சுயோட்சையாக தேர்தலில் நின்று இரண்டு பேரும் கடிமையாக தேர்தல் பணியற்றினர்கள் தேல்வி அடைந்தார் மனவேதனை அடைந்தார் உடல்நலிவுற்று இருந்த போது என் தாயார் அவரிடம் இதுக்கு எல்லாம் வருத்தபட கூடாது எவ்வளவுவே சொல்லியும் அவர் மறைந்தார்

அன்று எங்கள் தாய் ஒரு சபதம் செய்தார்.

நீ ஒரு குடும்பம் உனக்கு சீட்டு இல்லை உனக்கு ஒட்டு போட ஆள் இல்லை நீ இல்லை உன் வீட்டில் யாரும் கவுன்சிலர் ஆக முடியாது என்று கேளிபேசியவர்கள் முன் நம்ம விட்டில் இருந்து நிறைய கவுன்சிலர்கள் வர வேண்டும் என்று களத்தில் இறங்கி முதல் முதலில் பேரனை சுயோட்சையாகவே இறக்கி முழுமையாக களத்தில் இறங்கி பணி செய்து எதிர்த்து போட்டியிட்ட அனைவரும் தோல்வி அடைந்தனர் அதை தொடர்ந்து வந்த தேர்தல் களத்தில் ரங்கநாதபுரத்தில் ஒரு வட்டம் அல்ல இரண்டு வட்டத்திலும் மாறி மாறி மகன், பேரன், பேரனின் மனைவிகள் பேத்திகள் என்று அனைவரையும் கவுன்சிலர்கள் குடும்பமாக மாற்றி தனது கணவருக்கு கிடைக்காத கவுன்சிலர் கனவை அவரின் வாரிசுகளை ஆக்கி காட்டிட தனது உடல் உழைப்பை பணம் அறிவுரை என்று அனைத்து வழங்கி தனது சபதத்தை நிறைவேற்றி காட்டினார்.

எங்கள் பாட்டி வீரசின்னம்மாவின் வீரத்தையும் விவோகத்தை ஒருசேர பெற்ற வீர மங்கை ஆர் தனம்மாள் அவர்களின் உயிர் பிரியும் வரையில் யாரிடமும் கை ஏந்தவில்லை உயிர் பிரியும்

சில நேரங்களுக்கு முன்பு கூட தன்னுடைய கொள்ளு பேரனுக்கு பணம் கொடுத்து ஆசிர்வாதம் செய்தார் இவ்வளவு பெரிய குடும்பத்தின் தலைவியாக பொறுப்பு ஏற்று எல்லோர் இடமும் நட்பாக பழகி நல்ல பெயர் எடுப்பது என்பது மிகவும் கஷ்டம் ஆனால் இவர் எல்லோரையும் தான் கைகூள் வைத்து நடைபோட்டார் எல்லோரும் இவருக்கு 89 வயதா என்று கூறுவர்கள் ஆனால் அவர் எங்களுக்கு கடைசி வரையில் இளமையாகவே தெரிந்தார்.

அவர் மறைவின் சடங்குகள் முடியும் கடைசிகட்டத்தில் மகன்கள் மகள்கள் பேரன் பேத்திகள் கொள்ளு பேரன் பேத்திகள் என நூற்று மேற்பட்டோர் கலந்து கொண்டு தீ பந்தம் ஏந்தி சென்றதை பார்க்கும் போது காண்போர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது தனி ஒரு பெம்பாளை வீரசின்னம்மாவின் ஒற்றை பிள்ளை கே எஸ் ராமையா செட்டியாருக்கு தாம்பரம் ரங்கநாதபுரம் முழுக்க வாரிசுகள் இதற்கு எல்லாம் முழு முதர் காரணம் வீர மங்கைகள் இரண்டுபேர் ஒன்று அருப்புகோட்டை எஸ் வீரசின்னம்மா அடுத்து வண்ணாரபேட்டை ஆர் தனம்மாள் தாயே உன் பெயர் கூறும் போதே

இதயத்தில் மீன்னல் தேற்றுதே அம்மா என்னை தேற்றுவதற்காக ஒரு தேல்விக்கூள் நூறு வெற்றிகள் குவிந்துள்ளது சோர்ந்தால் அது கிடைக்காது என்று கூறி என் வேகத்தை அதிகபடுத்து வாயே இன்னும் மீதம் உள்ள நீ இல்லாத காலங்களை எப்படி கழிக்க போகிறோம் தாயே

நினைகையில் நெஞ்சம் பதறுகிறது உடல் சக்தியை இழக்கிறது கண்கள் தூங்க மறுக்கிறது அதனால் இதயத்தில் ஏற்பட்ட வலியால் இரவு விடிய விடிய ஆயாவிற்கும் அம்மாவிற்கும் உதயமான இந்த இரங்கல் செய்தி



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மதுரை வடக்கு 191, மதுரை தெற்கு 192, மதுரை மத்தியம் 193 மற்றும் மதுரை மேற்கு 194 ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் ஆலோசனைக் கலந்தாய்வு கூட்டம் வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் நடைபெற்றது அருகில் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மணியன், கோபு, பிரபாகரன், சாந்தி மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர் வீரக்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்,மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு குறைகளை கேட்டறிந்தார்.

## ஒட்டன்சத்திரத்தில் முதியவர் உடலை நல்லடக்கம் செய்த காவல்துறையினர்க்கு பாராட்டு



ஒட்டன்சத்திரம், மார்ச்.19

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர் பகுதியில் முதியவர் ஒருவர் இயற்கை மரணம் அடைந்தார் என அறிந்த காவல்துறையினர் அவர் மரணத்தை அறிவிப்புச் செய்திருந்தும் எந்த உறவினர்களும் வராத நிலையில் முதியவர் உடலை சமூக ஆர்வலர் ஐஸ்வர்யம் அழகு நிலையம் உரிமையாளர் சண்முகவேல் அவர்களின் மனிதநேய பண்பாலும் ஒட்டன்சத்திரம் காவல் சார்பு ஆய்வாளர் லியோனி ரஞ்சித்குமார் உத்தரவின் பேரில் காவல்துறை செந்தில், மணிகண்டன்,துணையோடு நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் முதியவரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது இதனால் இப்பகுதிவாள் பொதுமக்கள் ஒட்டன்சத்திரம் காவல்துறையினருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்து வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் .ஆர்.அழகுமீனா தேங்காய்பட்டணம் மீன்பிடித்துறைமுகத்தில் உள்ள மீன்வளத்துறை அலுவலகத்தில் மீன்வளத்துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.



மதுரை மாவட்டம் சோழவந்தான் சந்திரன் பேலஸ் மஹாலில் மதுரை அண்ணாநகர் தி ஐ பவுண்டேஷன் சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. மருத்துவர் விசாலாட்சி ஆலோசனையின் பேரில் பிரின்ஸ் இம்மானுவேல், மோகனா ,தினகரன், ஆகியோர் ஆலோசனை வழங்கினார்.

## மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களில் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்லும் பொதுமக்கள் தங்களுக்கான மருந்துகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாலும், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு தொடர்ந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளதாலும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதை கருத்திற்கொண்டு "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை கடந்த 24.02.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.



முதல்வர் மருந்தகம் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொழில்முனைவோர் சார்பில் 500 மருந்தகங்களும், கூட்டுறவுத் துறை சார்பில் 500 மருந்தகங்களும் என மொத்தம் 1000 மருந்தங்கள் முதற்கட்டமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், B.Pharm/D. Pharm படித்த பட்டதாரிகள் 1000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

முதல்வர் மருந்தகங்களில் பொதுமக்களுக்கு தேவையான தரமான மருந்துகள் சந்தை மதிப்பைக்காட்டிலும் 75% குறைந்த விலையில் கிடைக்கிறது. முதல்வர் மருந்தகங்களில் ஜெனரிக், பிரான்டட் மருந்துகளும், சித்தா, ஆயுர்வேதம், யுனானி மருந்துகள் மற்றும் சர்ஜிகல் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து மருந்துகளும் 25% வரை தள்ளுபடி விலையிலும் கிடைக்கிறது. மேலும், 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களில் இதுவரை 4,288 நபர்கள் மருந்துகள் வாங்கி பயனடைந்துள்ளனர்.

எனவே, பொதுமக்கள் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு தங்களுக்கு தேவையான மருந்துகளை மதுரை மாவட்டத்தில் 51 இடங்களில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகங்களின் வாயிலாக குறைந்த விலையில் பெற்று பயனடையலாம்.

முதல்வர் மருந்தகங்கத்தில் மருந்துகள் வாங்கி பயனடைந்த திருமோகூர் கிராமத்தை சார்ந்த திருமதி.ராஜம்மாள் தெரிவித்ததாவது:

என் பெயர் ராஜம்மாள். நான் திருமோகூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 58 வயதாகிறது. நான் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு 1 மாதத்திற்கு மருந்துகள் வாங்குவதற்கு குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் செலவாகும். எங்கள் குடும்பம் வறுமையில் உள்ளதால் என்னால் மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய்க்கு மருந்துகள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தேன். தற்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கியதில் இந்த மாதம் எனக்கு ரூபாய் 1500 வரை சேமிப்பு ஏற்பட்டுள்ளது. என்னைப் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய சூழ்நிலையில் உள்ளவர்கள் பயனடையும் வகையில் 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு

இ.சாலி தளபதி எம்.ஏ.,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

ம.கயிலைச் செல்வம், பி.இ.,

உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), மதுரை.

## ஆண்டிபட்டி அருகே கண்டமனூர் பகுதியில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சி

ஆண்டிபட்டி: மார்ச்: 19



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே கண்டமனூர் பகுதியில் காய்கறிப்பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பயிற்சி வேளாண் பூச்சியில் துறை, பயிர்பாதுகாப்பு மையம், கோயம்புத்தூர், மற்றும் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சிநிலையம் இணைந்து காய்கறிப்பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த பயிற்சிகாய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் முனைவர். செ. சுகன்யா கண்ணா, இணைப் பேராசிரியர்மற்றும் தலைவர் வரவேற்புரை வழங்கி பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

முனைவர் மு. அழகர், உதவி பேராசிரியர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பலகலைக்கழகம், கோயம்புத்தூர் காய்கறிப்பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் அதன் மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் பொறிகள் ஊடுபயிர்கள், உழவியல் முறைகள் இரைவிழுங்கிகள், ஒட்டுண்ணிகள், உயிர் கொல்லிகள் மற்றும் தாவரவியல் பூச்சிக் கொல்லிகள் பற்றி விரிவாக விளக்கினார்.

காய்கறிப்பயிர்களை தாக்கும் நோய்கள் அதனை கண்டறியும் முறைகள் நோய் உயிர்கொல்லிகள் மற்றும் அதனை பயன்படுத்தும் முறைகளையும், பயன்களையும் முனைவர். கி. கல்பனா, இணைப்பேராசிரியர் (நோயியல்) எடுத்துரைத்தார். முனைவர். சோ. பிரபு, இணைப்பேராசிரியர் (பயிர் நூற்புழுவியல்) நூற்புழுக்கள் தாக்கும் அறிகுறிகள் மற்றும் அதனை உயிரியியல் முறையில் மேலாண்மை செய்வது குறித்து விவரித்தார்.

இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகளும் தேனி வட்டார கிராம தங்கல் திட்ட தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களும் பங்கேற்று பயனடைந்தார்கள்.

## திருப்பூரில் கலைஞரின் வருமுன் காப்போம் இலவச பொது மருத்துவ முகாம்!

திருப்பூர், மார்ச்.19



திருப்பூர் மாநகராட்சி 2வது மண்டலத்திற்குட்பட்ட 3வது வார்டு பகுதியில் உள்ள உள்ள தனியார் முருகு மெட்ரிகுலேஷன் பள்ளியில் கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம் இலவச சிறப்பு மருத்துவ முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இலவச சிறப்பு மருத்துவ முகாமில், பொது மருத்துவம், இருதயநோய் சிகிச்சை பிரிவு, சர்க்கரை நோய் சிகிச்சை பிரிவு, குழந்தைகள் சிகிச்சை பிரிவு, தோல் சிகிச்சை பிரிவு, கர்ப்பிணிகள் பரிசோதனை பிரிவு, பல் சிகிச்சை பிரிவு, காது, மூக்கு, தொண்டை பிரிவு, எலும்பு மூட்டு பரிசோதனை பிரிவு, சித்த மருத்துவ பிரிவு,குடும்பநலம், பால்வினை நோய் பரிசோதனை பிரிவு உள்ளிட்ட சிறப்பு மருத்துவ பிரிவுகளும் கர்ப்பிணிகளுக்கான இலவச ஸ்கேன் பரிசோதனைகளும் மற்றும் ECG பரிசோதனை, பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்பட்டது

வடக்கு மாவட்ட திமுக கழக செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை துவக்கி வைத்தார்.உடன் துணை மேயர் ரா. பாலசுப்ரமணியம், உதவி ஆணையாளர் ஆர்.முருகேசன், திமுக வடக்கு மாநகர அமைப்பாளர் ஈ தங்கராஜ், 2வது மண்டல தலைவர் தம்பி ஆர் கோவிந்தராஜ், மாநகர நல அலுவலர் மரு.முருகானந்த், மாநகராட்சி பொது சுகாதாரக் குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் லோகநாயகி கருப்பசாமி, வேலம்மாள் விவிஜி காந்தி, பள்ளியின் தாளாளர் பசுபதி, பாண்டியன் நகர் பகுதிகழக செயலாளர் ஜோதி, பகுதி அவை தலைவர் தயாளன், வார்டு செயலாளர்கள் மூர்த்தி, வெள்ளைச்சாமி. வர்த்தக அணி மாநகர துணை அமைப்பாளர் அம்மன் நகர் தங்கராஜ் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநகர துணை அமைப்பாளர் குணசேகரன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ராஜ், தகவல் தொழில்நுட்ப அணி பகுதி ஒருங்கிணைப்பாளர் நவீன் குமார், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## உதகையில் நடைபெறும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறப்பு விழா



உதகை, மார்ச்.19

உதகையில் நடைபெறும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏப்ரல் முதல் வாரம் வருகை தருவதையொட்டி விழா நடைபெறும் அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் அதிகாரிகளுடன் இணைந்து கட்சியினரும் திங்கள்கிழமை ஆய்வுப் பணியில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறப்பு விழா, உதகை அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் உதகையில் நடைபெறவுள்ளது. இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொள்ள உள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் 20 ஆயிரம் பேர் பங்கேற்பார்கள் என்பதால், உதகை அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் பந்தல் அமைக்கும் பணி நடைபெற உள்ளது. இதை நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே .எம். ராஜு, திமுக மாநிலப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ் குமார், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், கோவை மண்டல பொதுப் பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், மாவட்ட பொதுப் பணித் துறை பொறியாளர் ரமேஷ் உள்பட அரசுத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.




மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.99 மாணிக்கம் ராமசாமி கலை அறிவியல் கல்லூரியில் மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாமினை மேயர்இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள் அருகில் துணை மேயர்தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சுவிதா, கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், உதவி ஆணையாளர் பார்த்தசாரதி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161